**கருவூலக் கணக்கு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**தமிழ்நாடு,சென்னை-35.**

*****

**முன்னிலை: திரு.தி.ந.வெங்கடேஷ்,இஆப.**

ந.க.எண்11247/சி1/2021 நாள்: 13.09.2021.

**பொருள்:** பணியமைப்பு- கருவூலக் கணக்குத் துறை - திருJ.பிரபு இளநிலை உதவியாளர், திருச்சி மாவட்ட கருவூல அலகு - கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை - ஆணை வெளியிடல்.

**பார்வை:**

1. கருவூல அலுவலர், திருச்சி அவர்களின் செயல்முறை ஆணை ந.க. எண்.5396/2018/ஆ2, நாள்.22.11.2019
2. கருவூல அலுவலர், திருச்சி அவர்களின் கடித ந.க. 5396/2018/ஆ2, நாள்.23.03.2021.
3. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ) த்துறை நாள்.26.02.2021

*******

**ஆணை:**

திருச்சி மாவட்டக் கருவூல அலகில் மணப்பாறை சார்நிலை கருவூலத்தில் கூடுதல் சார்நிலைக்கருவூல அலுவலராகப் பணியாற்றிய திருR.ஜெயராமன் கூடுதல் சார்நிலைக் கருவூல அலுவலர், அவர்கள் 30.09.2014 அன்று பணியிலிருக்கும்போது மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர் மற்றும் மகனுமாகிய திருJ.பிரபு அவர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு , பார்வை-1ல் காணும் செயல்முறைஆணைப்படி 22.11.2019 முற்பகல் முதல் திருச்சி மாவட்ட கருவூல அலகில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். தனியரின் பணிவரன்முறை செய்ய பார்வை-2-இல் காணும் கருவூல அலுவலர், திருச்சி அவர்களின் கருத்துரு இவ்வாணையரகத்தில் பெறப்பட்டது.

தனியரின் பணியினை வரன்முறை செய்தல் தொடர்பாக, பார்வை-3ல் காணும் அரசாணையில் பத்தி 5-ல் உள்ள (5.1),(5.2)- ன் தெரிவிக்கப்பட்டுள்ள தெளிவுரைகளின்படி மேற்கொள்ளுமாறு தெரிவித்ததை தொடர்ந்து, இவ்வாணையானது வெளியிடலாகிறது.

பார்வை-1-இல் காணும் செயல்முறை ஆணையில், திருJ.பிரபு (காலஞ்சென்ற

அவர்களின் மகன்) கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டார். மேலும் அச்செயல்முறையின்படி தனியர் திருச்சி மாவட்டக் கருவூல அலகிற்குட்பட்ட மாவட்டக்கருவூலம், திருச்சி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 22.11.2019 முற்பகல் முதல் தற்காலிகமாக பணியமர்த்தம் செய்யப்பட்டார்.

பார்வை-2-இல் காணும் திருச்சி மாவட்டக் கருவூல அலகு கருவூல அலுவலர் அவர்களின் கருத்துருவை பரிசீலித்து, அரசாணை (நிலை)எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ-1)துறை, நாள். 26.02.2021-ல் பத்தி 5-ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஓராண்டிற்கு மேலாகப் பணிபுரிந்து வரும் திருJ.பிரபு இளநிலை உதவியாளரின் தற்காலிகப்பணிநியமனம் இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும்படியாக உள்ளதாலும், கருணை அடிப்படையிலான பணிநியமனம் மற்றும் அப்பதவிக்குரிய அனைத்து தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும், திருJ.பிரபு அவர்களின் பணியிணை தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-இல் பிரிவு -28-இன்உட்பிரிவு (1)-ன் படி தனியர் பணியேற்ற நாளான22.11.2019 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

மேலும் தனியர்பொருட்டு தமிழ்நாடு கருவூலக்கணக்குத்துறை பணிவிதிகளின்படி அன்னாருக்கு தகுதிகாண்பருவம் துவங்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதுமிருப்பின் அதனை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது. தகுதிகாண்பருவம் துவங்கப்பட்டு மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவார் இவ்வாறு பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஊதிய உயர்வு/ ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் தனியர் அவற்றினைப் பெறத் தகுதியுடையவராகிறார். மேலும் பணிவரன்முறை ஆனது பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதியப்படவேண்டும்.

**தி.ந. வெங்கடேஷ்**
**கருவூலக் கணக்கு ஆணையர்.**

**பெறுநர்:**

1. திருJ.பிரபு

இளநிலை உதவியாளர்,

2. கருவூல அலுவலர்,
மாவட்டக் கருவூலம்,
திருச்சி.

3.இருப்புக்கோப்பு.

4. உதிரி

//ஆணைப்படி அனுப்பலாகிறது//

கண்காணிப்பாளர்
14/9/2021.

14/9/2021

ந.க.எண். 5396/2018/B2
நாள். 10.2021

மாவட்டக் கருவூலம்
திருச்சி

— நகல் வழங்கலாகிறது —

பெறுநர்:
திரு. J. பாபு,
இளநிலை உதவியாளர்,
மாவட்டக் கருவூலம்,
திருச்சி.

கருவூல அலுவலா
திருச்சிராப்பள்ளி

2/11/21

02/11/2021